<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**</u>

<u>**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**</u>

**OS.No:** 259/2024 நாள் 10.07.2025.

வாசா.1, திரு.ஞானசேகரன்

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் அவரை 7ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

நான் பிரண்டிங் பிரஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் 7ம் எதிர்வாதி நிறுவனத்தில் சீட்டு பணம் போட்டிருந்தேன். வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதி நிறுவனமானது 7ம் எதிர்வாதி நிறுவனத்தில் சீட்டு பணம்போட்டிருந்ததில் நான் 1 முதல் 6 எதிர்வாதிகளுக்காக வேண்டி ஜாமீன்தார் பொறுப்பில் இருந்து கையொப்பம் செய்து கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். 1ம் எதிர்வாதியானவர் 7ம் எதிர்வாதியிடமிருந்து சீட்டு பணத்தை பெற்றுக்கொண்டு அதனை திரும்ப செலுத்தாததால் பணம் செலுத்த வேண்டி 7ம் எதிர்வாதியானவர் எனக்கும் 2 முதல் 6 எதிர்வாதிக்கும் அறிவிப்புகளை அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் 1 முதல் 6 எதிர்வாதிகளுக்கு எதிராகத்தான் பரிகாரம் கோரியுள்ளேன்என்றும் 7ம் எதிர்வாதிக்கு எதிராக பரிகாரம் எதுவும் கோரவில்லை என்று சொன்னல் சரிதான் எனவே இந்தவழக்கானதை 7ம் எதிர்வாதியை பொறுத்து தள்ளுபடி செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 10th day of July 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.